சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 100/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-5 |
| சாட்சியின் பெயர் | : | ஞானவேல் |
| கணவர் பெயர் | : | மூர்த்தி |
| கிராமம் | : | கிடாரம்கொண்டான் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | ஆசாரி |
| வயது | : | 40 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 7 மற்றும் 10ம் எதிரிகள் ஆஜர். 8 மற்றும் 9 ம் எதிரிகள் இருவரும் வேறு வேறு வழக்குகளில் முறையே 8 ம் எதிரி மதுரை மத்திய சிறையிலும், 9 எதிரி கோவை மத்திய சிறையில் உள்ள காரணத்தினால் அவர்களை ஆஜர் செய்ய P.T Warrant பிறப்பிக்கப்பட்டுள்ளது. 8ம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். 9ம் எதிரி கோவையில் உள்ள சிறையில்

இருந்து வீடியோ கான்பிரென்ஸ் மூலம் எதிரி ஆஜர் படுத்துவதாக வேண்டுகோள் கடிதம் கொடுத்ததன் அடிப்படையில் இன்று மேற்படி 9 எதிரி வீடியோ கான்பிரென்ஸ் மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகியுள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து ஆசாரி சமூகத்தை சேர்ந்தவன் ஆவேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வீடியோ கான்பிரென்சின் மூலம் ஆஜராகியுள்ள ஆஜராகியுள்ள 9 எதிரியை எனக்கு தெரியாது. அகரத்திருநல்லூர் கிராமத்தை சேர்ந்த செல்வமணி மகன் குமரேசன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

திருவாரூர் கிடாரம் கொண்டான் என்ற இடத்தில் மரவேலை செய்யும் கடை உள்ளது என்று சொன்னால் ஆமாம். கடந்த 14.11.2021 ஆம் தேதி மாலை 5.20 மணியளவில் நான் மேற்படி கடையில் அமர்ந்திருந்தபோது 30 வயது மதிக்கத்தக ஒரு ஆண் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும், அதில் 40 வயது மதிக்கத்தக்க ஒரு பெண் அமர்ந்திருந்தார் என்றும், அந்த சமயத்தில் அவர்கள் பின்னார் இருந்து இரு சக்கர வாகனத்தில் வந்த 20 இருந்து 25 வயது மதிக்க தக்க நபர்கள் முன்னார் ஆணும் பெண்ணும் வந்த மறித்து அவர்கள் கையில் வைத்திருந்த ஆயுதங்களால் வாகனத்தை ஓட்டி வந்த நபரை வெட்டினார்கள் என்றும்,

இதில் இரு சக்கர வாகனத்தில் வந்த இருவரும் கீழே விழுந்து விட்டனர் என்றும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. இது சம்பந்தமாக என்னை திருவாரூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது நான் சம்பவத்தை பார்த்தாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது வேண்டும் என்றே உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.07 17:10:35 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.